DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, RAMANATHAPURAM

**CC.No. 05/2023**

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 18th day of November 2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | **PW – 9** | கிராமம் | : | இராமநாதபுரம் |
| பெயர் | : | தெய்வேந்திரன் | தாலுகா | : | இராமநாதபுரம் |
| த/பெ. | : | முனியாண்டி | சமயம் | : | இந்து |
| வயது | : | 60 | ஜாதி | : | -- |
| தொழில் | : | சார்பு ஆய்வாளர் | | | |

<u>நாள்: 18.11.2025</u>
<u>நேரம்: 11.50</u>

2ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி ஆஜர் இல்லை. அவரது தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

சாட்சியிடம் சத்தியபிரமாண வாக்குமூலம் பெறப்பட்டது.

**<u>முதன்மை விசாரணை:</u>**

நான் உச்சிப்புளி காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து கடந்த 30.05.2025ம் தேதி ஓய்வு பெற்று தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். கடந்த 11.10.2022ம் தேதி காலை 09.00 மணியளவில் நான் திருஉத்திரகோசமங்கை காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது அ.சா.1 குமாரவேல் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகார்மனுவை பெற்று புகாரின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 88/2022, U/s. 294(b), 323, 506(1) IPC & 4 of TNPHW Act ன்கீழ் வழக்குப் பதிவு செய்தேன். வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையையும், புகார்மனுவையும் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகும்.** பின்னர் இவ்வழக்கை நான் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் செல்வராஜ் மற்றும் திருமுருகன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த

பார்வை மகஜர் ஏற்கெனவே அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகும்.**

பின்பு சாட்சிகள் குமாரவேல், கர்ணபூபதி, பாலகங்காதரன், செல்வி, காளியம்மாள், நாகவள்ளி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு 1, 2 எதிரிகள் இருவரும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக்கிளையில் முன்ஜாமின் பெற்று பிணையில் சென்றுள்ளார்கள். பின்பு எனது விசாரணையை முடித்து அதே பிரிவுகளின் கீழ் எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

அ.சா.1 காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க வந்தபோது, அவருடன் எத்தனை நபர்கள் வந்தார்கள் என்றால் ஊரில் உள்ள முக்கியஸ்தர்கள் வந்தார்கள். அ.சா.1 எனக்கு முன்பே தெரிந்த நபரா என்றால் தெரிந்த நபர். அ.சா.1 கொடுத்த புகாரை அவர் தான் எழுதினாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, அவர் தான் கொடுத்தார். புகார் மனு எத்தனை மணிக்கு என்னிடம் கொடுக்கப்பட்டது என்றால் காலை 9.00 மணிக்கு கொடுக்கப்பட்டது. நான் தான் அந்த புகார்மனுவை பெற்று கொண்டேனா என்றால் நான் தான் பெற்று கொண்டேன், வேறு யாரும் பெறவில்லை. புகார்மனுவில் உள்ள சங்கதிகளை பொறுத்து தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் சரிதான்.

முதல் தகவல் அறிக்கையை எத்தனை மணிக்கு பதிவு செய்து முடித்தேன் என்றால் காலை 9.00 – 9.30 மணிக்குள் பதிவு செய்து முடித்தேன். அ.சா.1 காவல் நிலையம் வந்தபோது புகார்மனு எழுதி கொண்டு வந்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அ.சா.1 புகார் கொடுக்க வந்தபோது, அவரது மனைவி அ.சா.2 உடன் இருந்தாரா என்றால் இருந்தார். முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்த பின்பு நேரடியாக நான் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை மேற்கொண்டேன் என்றால் சரிதான். எத்தனை மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றால் காலை 10.00 மணிக்கு சென்றேன். சம்பவ இடத்திற்கும், காவல் நிலையத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 5 கி.மீ தூரம் இருக்கும். சம்பவ இடத்தில் வைத்து சம்பவ இட சாட்சிகளை விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். என்னுடன் சம்பவ இடத்திற்கு யார் யார் வந்தார்கள் என்றால் ஆண்காவலர்கள் என்னுடன் வந்தார்கள்.

சம்பவ நடந்ததாக சொல்லப்படும் நேரத்தை நான் உறுதிப்படுத்தி கொண்டேனா என்றால் புகாரை பெற்றவுடன் உறுதிபடுத்தி கொண்டேன். சம்பவம் நடந்ததாக புகார்மனுவில் சொல்லப்பட்டுள்ள நேரமும், விசாரணையில் சொல்லப்பட்டுள்ள நேரமும் ஒன்றுதானா என்றால் ஒரே நேரம் தான், காலை 8.00 மணி. சம்பவ இட சாட்சி அ.சா.7 செல்வராஜை விசாரித்து நான் வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் பதிவு செய்தேன். அனைத்து சாட்சிகளையும் நான் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் பதிவு செய்தேன். எனது

விசாரணையில் அ.சா.1 யை, எதிரிகள் தாக்கியதாக சொல்லப்படும் சங்கதி விசாரணையில் புலப்பட்டதா என்றால் புலப்பட்டது. அது ஆவணங்கள் மூலம் நிரூபிக்கப்படவில்லை என்றால் புகார்வாக்குமூலத்தில் சொன்னபடி தான் நிரூபிக்க இயலும். அ.சா.2 யை நான் விசாரணை செய்தேனா என்றால் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். நீதிமன்ற விசாரணையில் அ.சா.2 தன்னை விசாரிக்கவில்லை என்று கூறியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, நான் வாக்குமூலம் பதிவு செய்தேன்.

நான் விசாரணை அதிகாரியாக விசாரணை மேற்கொள்வது எனது கடமை என்று சொன்னால் சரிதான். அ.சா.2 முதல் விசாரணையில் சொல்லியுள்ளபடி தன்னை விசாரணை அதிகாரி விசாரிக்கவில்லை என்று கூறியுள்ளதால், நான் தாக்கல் செய்துள்ள வாக்குமூலம் ஜோடிக்கப்பட்டது என்றால் சரியல்ல, அ.சா.2 படிக்காதவர். அ.சா.2 தனிப்பட்ட முறையில் எந்த புகாரும் என்னிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான், அ.சா.2 ன் கணவர், அ.சா.1 புகார் கொடுத்தார். அ.சா.1 சொல்லியுள்ள சங்கதிகளை அடிப்படையாக வைத்து அ.சா.2 யை எந்த விசாரணையும் செய்யாமல், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பெண்களுக்கு எதிரான குற்றங்களை பதிவு செய்யும்போது, அவர்களுடைய வாக்குமூலத்தை பெற்று, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய வேண்டும் என்று சொன்னால் சரிதான், நான் அ.சா.2 கொடுத்த வாக்குமூலத்தை பெற்று, வழக்கு பதிவு செய்தேன். இந்த வழக்கில் கண்ணுற்ற சாட்சிகள் 2 நபர்கள் பிறழ்சாட்சியாக மாறியுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கில் தனிப்பட்ட சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான், புகாரில் சொல்லப்பட்டுள்ள சாட்சிகளை நான் விசாரணை செய்தேன்.

அ.சா.4 முதல் விசாரைணயிலும், குறுக்கு விசாரணையிலும் என்னை விசாரணை அதிகாரி விசாரிக்கவில்லை என்று சொல்லியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அ.சா.7 என்னை யாரும் விசாரிக்கவில்லை என்றும், வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்றும் கூறியுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரமானது காலை 8.00 என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அ.சா.6 சம்பவம் காலை 7.00 மணிக்கு நடந்ததாக தனது சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அ.சா.1 சம்பவ நடந்ததாக கூறப்படும் நேரம் காலை 8.30 மணி என்று சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. அ.சா.1 எதிரிகள் தன்னை நெஞ்சை பிடித்து தள்ளிவிட்டதாக தனது குறுக்கு விசாரணையில் கூறியுள்ளார் என்றால் அசிங்கமாக பேசி, கைகளால் தாக்கியதாக கூறியுள்ளார். அ.சா.1 ஒரு இருதய நோயாளி என எனது விசாரணையில் தெரியவந்ததா என்றால் இல்லை.

அ.சா.1 ம், அ.சா.2 ம் மட்டுமே, எதிரிகள் தங்களை அசிங்கமாக பேசினார்கள் என்று கூறியுள்ளார்கள், மற்ற சாட்சிகள் யாரும் அவ்வாறு கூறவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள சாட்சிபட்டியலில் உள்ள பெண்சாட்சிகள் யாரும் எதிரிகள் அசிங்கமாக பேசியதாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் சண்டை நடந்ததாக எனது விசாரணையில் ஏதேனும் ஆதாரங்கள் தென்பட்டதா என்றால் சாட்சிகளின் மூலம் தெரிந்து கொண்டேன். அ.சா.6 தனது சாட்சியத்தில் சம்பவத்தை கண்ணால் காணவில்லை என்றும், கேட்டு தான் தெரிந்து கொண்டேன் என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. அ.சா.1 தனது முதல் விசாரணையில் இடது நெஞ்சை பிடித்து தள்ளியதாகவும், மறுநாள் குறுக்கு விசாரணையில் வலதுநெஞ்சில் தள்ளியதாகவும், அ.சா.6 காளியம்மாள், தனது முதல் விசாரணையில் கன்னத்தில் அடித்ததாகவும், 3 விதமாக மாறிமாறி கூறியுள்ளார்கள் என்றால் சரியல்ல.

குற்ற இறுதி அறிக்கையில் எதிரிகள் ஆபாசமாக பேசியதாக நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் ஆபாசமாக வார்த்தைகளை பயன்படுத்தியிருந்தால், மற்ற சாட்சிகள் அதனை நீதிமன்ற விசாரணையில் குறிப்பிட்டிருப்பார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரிகள் குற்றம் செய்ததாக உறுதிப்படுத்தும் எந்தவொரு சாட்சிகளையும் குற்ற இறுதி அறிக்கை உறுதிப்படுத்தவில்லை என்றால் சரியல்ல. 2 ம் எதிரிக்கும் முகத்தில் இரத்தம் வடிந்ததாக சாட்சிகள் தங்கள் விசாரணையில் சொல்லியுள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இது சம்மந்தமாக 2 ம் எதிரி ஒரு புகார் கொடுத்துள்ளார் என்றாலும், அது குறித்து நான் விசாரணை செய்யாமல் ஒருதலைபட்சமாக செயல்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல, 2 ம் எதிரி கொடுத்த புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது, அதன் குற்ற எண். 89/2022 ஆகும். வழக்கிற்கும், எதிர் வழக்கு பதிவு செய்யப்படும்போது ஒன்றாக விசாரணை மேற்கொண்டு, ஒன்றாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்ற விவரம் தெரிந்து, அதனை நான் பின்பற்றவில்லை என்றால் சரியல்ல, குற்ற எண்.88/2022 வழக்கில் மருத்துவ சான்று மற்றும் பிற சாட்சிகள் இல்லாததால் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன்.

இந்த வழக்கில் நான் எந்தவொரு ஆதாரங்களையும் கொடுக்காமல், உண்மை சம்பவங்களை மறைத்து எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தனிப்பட்ட சாட்சிகள் ஏதும் இல்லை என்றாலும், ஆவணங்கள் ஏதும் இல்லை என்றாலும், எதிரிகளுககு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. ஆபாசமாகவோ, அச்சமுறுத்தும் வார்த்தைகளாலோ 1, 2 எதிரிகள் சாட்சிகளை மிரட்டவில்லை என்றால் சரியல்ல. எனது விசாரணையில் சொல்லப்பட்டுள்ள விவரத்திற்கும், முதல் விசாரணையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளுக்கும் முரண்பாடுகள் உள்ளது என்றால் சரியல்ல. தனது

அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து எதிரிகள் மீது பொய்யாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

CATHRENE JEBA SAKUNTHALA S

Digitally signed by CATHRENE JEBA SAKUNTHALA S
Date: 2025.11.18 16:25:38 +0530